2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் சரியில்லை என்று கூறியிருக்கின்றார். அதில் ஏதாவது பிரச்சினை இருந்தால், துறையின் சார்பாக அதை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

பேருந்து வசதி

***50862—திரு. க.சு. சரவணக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய புதிய விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 160 A/C *சென்னையிலிருந்து பெரியகுளம் வழியாக தேனிக்கு தலா ஒரு பேருந்து வீதம் இரண்டு பேருந்துகள் இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், தடம் எண் 163* ASS *படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்து, சென்னையிலிருந்து பெரியகுளம் மற்றும் தேனி வழியாக போடிக்கு தலா ஒருபேருந்துவீதம்இரண்டுபேருந்துகள்இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், மேற்படி பேருந்துகளுக்கு இணையதளம் மூலமாக முன்பதிவு செய்து பயணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பெரியகுளம் பயணிகள் மேற்கூறிய*

பேருந்து வசதியினைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார் அவர்கள்.*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். உள்ளாட்சியில், நல்லாட்சி கண்ட கழகத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் வழியாகச் செல்லும் அரசுப் பேருந்துகள் பாதிக்குமேல் புதிய பேருந்து நிலையம் செல்லாமல் வெளிச் சாலையில் செல்கின்றன. பொதுமக்கள் பயன்பெறும் வகையில், அனைத்துப் பேருந்துகளும் புதிய பேருந்து நிலையம் செல்ல ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மருகால்பட்டியில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் விவசாய கூலித்தொழிலாளர்களின் குழந்தைகள் ஆவர். அவர்களுக்கு உரிய நேரத்தில் பேருந்து வசதி இல்லை. எனவே, அவர்களுக்கு ஆண்டிப்பட்டியிலிருந்து மருகால்பட்டி வழியாக வாடிப்பட்டிக்கு செல்லும் வகையில் காலை 8 மணிக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தொகுதி மக்கள் அனைவரும் மாவட்ட அரசு அலுவலகங்களுக்குச் செல்லும் வகையிலும், மாவட்ட அரசு மருத்துவமனைக்கு எளிதாகச் சென்று வரும் வகையிலும் ஜி.கல்லுப்பட்டியிலிருந்து தேவதானப்பட்டி, ஜெயமங்களம் மாவட்ட அரசு மருத்துவமனை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், கேள்வியைக் கேளுங்கள். படித்துக்கொண்டே இருந்தால் எப்படி? சரி, படியுங்கள். நீங்கள் புதிய உறுப்பினர், அதனால்தான் இதைச் சொல்கிறேன்.*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில், அரசு மருத்துவமனை மற்றும் அரசு அலுவலகம் வழியாக அனைத்து ஊர்களிலிருந்தும் தேனி நகரம் செல்வதற்கு வசதியாக*

2020 ஜனவரி 9]

பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்னையிலிருந்து பெரியகுளத்திற்கு பேருந்து வேண்டுமென்று கேட்டிருந்தார். அத்துடன் அவர் 3–4 கோரிக்கைகளை வைத்துள்ளார். அவற்றினை எழுத்துபூர்வமாக அவர் என்னிடத்தில் கொடுத்தால், அது சம்பந்தமாக துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, தேவையான பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க அரசு பரிசீலிக்கும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இன்னும் ஒரு கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி நகரில் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக உள்ளது. இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாததாக இருந்தாலும் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்று உங்களுக்கே தெரிகிறது. அப்படியானால் அதனை எதற்கு கேட்கின்றீர்கள்?*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் போக்குவரத்துத் துறையைச் சார்ந்ததுதான். அந்தப் பகுதியில் இரயில்வே மேம்பாலத்தை மூன்று இடங்களில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகின்றேன். கடந்த 3 வருடங்களாக யானைக்கவுனி பாலம் பழுதடைந்துள்ள காரணத்தினால் 159A, 159B, 59, 37, 37G ஆகிய பேருந்துகள் பேசின்பிரிட்ஜ், புளியந்தோப்பு வழியாகச் சென்றுகொண்டிருக்கின்றன. அப்படி இயக்கக்கூடிய பேருந்துகளை புளியந்தோப்பு மின்சார வாரிய அலுவலகத்தில் நிறுத்தம் செய்தால் அங்கிருந்து கோயம்பேடு செல்லக்கூடிய கூலித் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பெருமளவு பயன் பெறுவார்கள். அந்தப் பேருந்துகள் நடராஜா தியேட்டர் பேருந்து நிலையத்தில் நிறுத்தப்படுவதால் பயணிகள் ஏறக்குறைய 1 கிலோ மீட்டருக்குமேல் நடந்து சென்று, அடுத்தப் பேருந்தை பிடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதேபோல், தியாகராய நகரிலிருந்து இயக்கக்கூடிய 9 ஆம் எண் பேருந்து சேத்துப்பட்டு, எழும்பூர் மருத்துவமனை, எழும்பூர் இரயில்வே நிலையம், சென்ட்ரல் இரயில்வே நிலையம் வழியாக பாரிமுனை நோக்கி இயங்கிக்கொண்டிருந்தது. மெட்ரோ இரயில் பணி நடைபெற்ற காரணத்தினால், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்டது. இப்போது மெட்ரோ இரயில் பணிகள் முடிவடைந்துவிட்டதால், மேற்கூறிய 9 ஆம் எண் வழித்தடப் பேருந்தையும், 17 ஆம் எண் வழித்தடப் பேருந்தையும் மேற்குறிப்பிட்ட இடங்களில் நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இரண்டு வழித்தடங்களும் பாலம் கட்டுவதற்கான வேலைகள் நடைபெற்றதால், மாற்று வழித்தடத்தில் இயக்கப்பட்டன. இப்போது பணிகள் முடிந்துவிட்டதால் அந்தப் பேருந்துகளை பழைய வழித் தடங்களில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.